Registered as a Newspaper

BECON
A/L, O/L வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.
156/3, ஸ்ராலி வீதி, யாழ்நகர்.

உதயன்

விலை: ரூ. 1-25

BECON
A/L, O/L வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன
விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.
156/3, ஸ்ராலி வீதி, யாழ்நகர்.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கூடல் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 24 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபான் பிறை 07 (07.04.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 112

சூழ்ச்சிப் பொறி வைக்க வந்தவேளை 7 படையினர் பலி!

வல்வையில் நடந்த சம்பவம்

— உதயன் செய்தியாளர் சி. சந்திரலிங்கம் —

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 7

வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த சில நாட்களாக போராளிகளுக்கும் அரச படையினருக்கும் கடும் மோதல்கள் நடந்து வருகின்றன.

போராளிகளைத் தந்திரமாகச் சிக்கவைத்துக் கொல்லும் நோக்கத்துடன் சூழ்ச்சிப் பொறி வைக்க வந்த இராணுவக் கோஷ்டி ஒன்றை விடுதலைப் புலிகள் தக்க தருணத்தில் தாக்கினர். அதன் காரணமாக அந்தக் கோஷ்டிக்குத் தலைமை வகித்து வந்த அதிகாரி ஒருவர் உட்பட ஏழு படையினர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் மயிலியதனையில் இடம் பெற்றது.

இராணுவக் கப்டன் ஒருவர் தலைமையில் சிப்பாய்கள் போராளிகளை வீழ்த்தும் சூழ்ச்சிப்பொறி ஒன்றை வைப்பதற்காக வந்தனர்.

அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினருடன் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

இந்த மோதலில் கப்டன் உட்பட ஏழு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிகிறது.

இதன் பின்னர் வல்வை இராணுவ முகாமில் இருந்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதை எதிர் தாக்குதல் மேற்கொண்ட புலிகளும் ஷெல் டனர்.

ஷெல் தாக்குதல்களில் மூன்றுபேர் பலி

பலர் படுகாயம்

வல்வெட்டித்துறை, ஏப்7

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வல்வை இராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்

உயிரிழந்தவர்களில் தந்தையும் மகனும்அடங்குகின்றனர்.

உயிரிழந்த மூன்றாவது நபர் ஒரு பெண். பாதுகாப்புத் தேடி ஓடியபோது வீதியில் வைத்து அவரை ஷெல் தாக்கியது

உயிரிழந்தவர்களின் விவரம் வருமாறு;

1. சுந்தரம் இரத்தினம் (ஆண்டி) வயது 48 பண்டிக்கண்டவீதி.
2. இரத்தினம் நவேந்திரம் (வயது 21/2)

தந்தையும் மகனுமான இவர்கள் ஷெல் தாக்கியதால் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

உயிரிழந்த பெண்ணின் பெயர் முத்துலிங்கம் பரமேஸ்வரி, 38 வயது சத்திரச்சந்தையைச் சேர்ந்தவர்.

காயமடைந்தவர்களில் சிலர் மந்திசை ஆஸ்பத்திரியிலும் வேறு சிலர் மாற் ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களின் விவரம் வருமாறு;

1. இராசையா (வயது 58) வல்வை
2. எஸ். துரைராசா, (வயது 54) வல்வை
3. எஸ். நடராசா,

(4ஆம் பக்கம் பார்க்க)

விறகு ஏற்றிவந்த இளைஞன் சூட்டுக்கு பலி

சடலம் வண்டியுடன் எரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

மாட்டு வண்டியில் விறகு ஏற்றி வந்த இளைஞன் மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இளைஞன் பலியானான்.

நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள செம்மலைப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

எஸ். கணியம் (வயது 24) என்ற இளைஞனே சிப்பாய்களின் சூட்டுக்குப் பலியானவர்.

இறந்த இளைஞனது சடலத்தை சிப்பாய்கள் அந்த வண்டியில் போட்டு தீமூட்டி எரித்தனர் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை நாயாறுப் பகுதியில் கரைவலை வீசிக் கொண்டிருந்த மீனவர் மீது சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சுப்பையா விரபத்திரன் (வயது 52) என்பவர் காயம் அடைந்தார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ் இந்து பிரபானந்தன் பிரபல்யமான கிரிக்கெட் வீரர்

36 ஆயிரம் வாக்குகள் பெற்றுத் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 7

இந்த ஆண்டின் வடக்கின் மிகப் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரராக யாழ் இந்துக் கல்லூரியின் முன்னணிப் பந்து வீச்சாளர் பொன்னுத்துரை பிரபானந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு யாழ்ப்பாணம் ஜொலி விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகமும் நடத்திய தெரிவில் 36 ஆயிரத்து 336 வாக்குகளைப் பெற்று அவர் முதலிடத்தைப் பெற்றார்.

வாராந்த வாக்கு எண்ணிக்கையின்போது அவ்வப்போது முன்னணியில் திகழ்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்

பிரபானந்தன்

எஸ். இருபானந்தன் 24ஆயிரத்து 991 வாக்குகளைப் பெற்று இரண்டாவதாகத் தெரிவானார். மூன்றாவதாக வந்த சென் ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் ஏ. வாகீசனுக்கு 11ஆயிரத்து 586 வாக்குகள் கிடைத்தன.

இவ்வாண்டின் பிரபல்யமான பாடசாலைக் கிரிக்கெட் வீரராகத் தெரிவு செய்யப்பட்ட பிரபானந்தன் நடைபெற்று முடிந்த பாடசாலை கிரிக்கெட் பருவகாலத்தில் தனது வேகப் பந்து வீச்சினால் பரபரப்பை ஏற்படுத்தியவர். சிறந்த பந்து தடுப்பாளராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் திகழ்ந்தவர்.

கடந்த வருடம் யாழ் மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட இவர் யாழ் இந்து

(4-ஆம் பக்கம் பார்க்க)

கர்ப்பிணியின் வயிற்றைத் துளைத்து சிசுவைக் கொன்ற ஷெல்!

வல்வையில் நிறைமாதக் கர்ப்பிணிப்பெண்ணொருவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி இடுப்பு வயிற்றினூடு இருந்த ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்தது.

ஞாயிற்றுக்கிழமை இரவு வல்வெட்டித்துறையில் படையினர் நடத்திய தாக்குதலின்போது இந்தச் சம்பவம் நடைபெற்றது.

பிரங்கித் தாக்குதலுக்கு இலக்கான கர்ப்பிணியின் வயிற்றை ஷெல் துளைத்து தாக்கின. வயிற்றில் ஏற்பட்ட பிளவின் ஊடாக குழந்தையின் பாதம் வெளியே வந்தது.

காயமடைந்த கர்ப்பிணிப் பெண் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். குழந்தை இறந்த நிலையில் வெளியே எடுக்கப்பட்டது.

இவருடைய கணவனும் மாமனாரும் இத்தாக்குதலின்போது அந்த இடத்திலேயே பலியானார்கள். (உ-10)

இன்று ஹர்த்தால் கடை அடைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ்ப்பாணத்தில் இன்று பூரண ஹர்த்தாலும் கடை அடைப்பும் இடம்பெறும்.

யாழ் வர்த்தகர் சங்கமும் வடபிராந்திய மினிபஸ் சேவையாளர் சங்கமும் இயற்றை ஏற்பாடு செய்துள்ளன.

ஹர்த்தாலுக்கு ஆதரவாக அரச அலுவலகங்கள் இன்று மூடுமாறு யாழ் வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கோட்டை முகாமில் இருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களினால் நகரில் உள்ள பல வர்த்தக நிறுவனங்கள் பெரும் சேதம் அடைவதைக் கண்டித்தும் –

யாழ் ஆஸ்பத்திரி மீது (4 ஆம் பக்கம் பார்க்க)

"மேடையில் இருக்கிற இரண்டுபேரில் யாரு எம். எக், ஏ..., யாரு மந்திரி...?"

"ஜேப்படிக்கிற திருடன் மாதிரி இருக்கிறவர் எம். எக். ஏ. முகமூடிக் கொள்ளைக்காரன்மாதிரி இருக்கிறவர்தான் மந்திரி...!"

ஆனந்தவிகடன் ஆசிரியர் விடுதலை

சென்னை, ஏப்ரல் 7

ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் நேற்று சென்னை மத்திய சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்

தமிழ்நாடு சட்டசபைக் கட்டத்தில் நேற்று சபாநாயகர் திரு பி. எச் பாண்டியன் பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து திரு பாலசுப்பிரமணியன் விடுவிக்கப்பட்டார்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் விருப்பத்திற்கு இணங்க அவரை விடுதலைசெய்யும் உத்தரவைப் பிறப்பிப்பதாக சபாநாயகர் பாண்டியன் அறிவித்தார்

சபாநாயகரின் தீர்ப்பை அடுத்து இது விஷயத்தை விவாதிக்க விருப்புவதாக இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களே சபா

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ கிளிநொச்சியில் நீர்ப்பாசனவேலை ஸ்தம்பிதமடைந்தது

அபி. திட்டங்களுக்கும் மூடுவிழா?

யாழ்ப்பாணம், ஏப்ரல். 7

கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசன வேலைகள் ஸ்தம்பிதம் அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களும் முற்றாக நிறுத்தப்பட்டு மூடுவிழா நடத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தில் பணிபுரிந்த 15 தொழில் நுட்ப அதிகாரிகளில் பத்துப்பேர் காரணம் எதுவும் இன்றி வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஏனைய அவர்களின் இடங்களுக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

இதே வேளை இதே திணைக்களத்தைச்சேர்ந்த மூன்று உயர் அதிகாரிகள் மீதும் தக்க காரணம் எதுவும் காட்டப்படாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த செயற்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களின் புனர் நிர்மாண வேலைகளையும், விவசாய, நெற்செய்கை அபிவிருத்தி வேலைகளையும் இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த ஒரு முயற்சியாகவே கருதப்படுகின்றது.

ஏற்கனவே யாழ் மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகள் கடந்த ஒன்பது மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்தி வேலைகளுக்கான உலக வங்கியினதும், அரசினதும் நிதி நிறுத்தப்பட்டுள்ளதே இதற்குக் காரணம். (அ-ள-76)

பஞ்சாங்கம்

07—04—1987
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10-38 முதல் 12 08வரை
ராகுகாலம்:
3-08 முதல் 4 38 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொதுவானவை

நவமி திங்கள்இரவு
4. 36வரை
ஸ்ரீராம நவமி

வீடுகளே தேவை; குண்டுகள் அல்ல!

நைரோபியில் பிரேமா

நைரோபி ஏப் 7

வீடுகளே மக்களுக்குத் தேவை;குண்டுகள் அல்ல

இப்படிப் பிரதமர் பிரேமதாச தெரிவித்தார்.

நைரோபியில் நேற்று ஆரம்பமான சர்வதேச வீடமைப்புத் திட்டமாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசினார் பிரதமர்.

அப்போது அவர் உலக

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

விடுகளே தேவை குண்டுகள் இல்லை என்று நைரோபியில் பேசினார் அவர். இஞ்சை தமிழன் கஷ்டப்பட்டுத் தேடிய பணத்தில் கட்டின வீடுகளை எல்லாம் குண்டு போட்டு நாசமாக்கினம் ஊருக்கடி கண்ணே உனக்கிதே உபதேசம் என்டது நல்லாத் தெரிஞ்சிருக்கு உலகுக்கு.....!

தொடரும் ஷெல் தாக்குதல்

அச்சுவேலி, ஏப் 7

பலாலி, வயாவிளான் இராணுவ முகாம்களில் இருந்து ஞாயிறு, திங்கள் கிழமைகளில் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குப்பிளான், கந்தரபுரம், ஒட்டகப்புலம், களவாய்வெளி ஆகிய பகுதிகளில் தோட்டவெளிகளில் விழுந்து பலத்த சத்தத்துடன் இவைவெடித்தன (இ-11)

முல்லைத்தீவு, அளம்பிலை சுற்றிவளைத்து தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப். 7

ஐந்து ஹெலிகொப்டர்களிலும் பதினாறு சிறிய பீரங்கிப் படகுகளிலும் வந்த நூற்றுக்கும் அதிகமான சிப்பாய்கள் முல்லைத்தீவு, அளம்பில், செம்மலைப் பகுதிகளைச் சுற்றி நேற்று பலத்த தேடுதல் நடத்தினர்.

ஆகாயத்தாலும் கடலாலும் வந்த சிப்பாய்களுக்கு உதவியாக முல்லைத்தீவில் இருந்தும் தரைமார்க்கமாக நூற்றுக்கு அதிகமான சிப்பாய்கள் இப்பகுதிகளைச் சுற்றி வளைத்தனர்.

இச் சுற்றிவளைப்பின் போது நானூறுக்கும் அதிகமான இளைஞர்கள் படையினரால் சோதனை செய்யப்பட்டனர்.

அப்பி ஓட முயன்ற பல இளைஞர்கள் சிப்பாய்களினால் கட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை ஐந்து மணி அளவில் ஆரம்பமான இந்த முப்படைத் தேடுதல்கள் பகல் பத்து மணிவரை நீடித்தன என்று கூறப்படுகிறது.

சிப்பாய்கள் இப்பகுதிகளைச் சுற்றி தேடுதல் நடத்திய பொழுது ஹெலிக்கொப்டரில் இருந்து சில குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைஞர் காயம்

யாழ் பிரதான வீதியில் ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக நின்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர் கோட்டை சிப்பாய்களின் சூட்டுக்கு இலக்கானார்.

நேற்று மாலை நான்கு மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது

அப்துல் மஜீத் (வயது 20) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

இவரது தொடைகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. (இ-10)

பத்மா இராமநாதன் காலமானார்

யாழ்ப்பாணம், ஏப்7

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தமிழ்மாளிரின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக இறுதிவரை உழைத்த கல்வியாளருமான செல்வி பத்மா

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ் வர்த்தகர் சங்கம் இன்று ஒழுங்கு செய்துள்ள ஹர்த்தாலுக்கும் கடை அடைப்புக்கும் மனிதநேயமுள்ள வெகுஜன இயக்கம் ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விரும்பினக்கு

(புறொயிலர்கள்) இறைச்சிக்கான கோழிகள் விற்பனைக்கு உண்டு. இலேசாகவா 40/-, மைக்ரோ கே. கே. எஸ். வீதி குளப்பிட்டி. சந்தி. கொக்குவில். (1884)

அறிவித்தல்

நாம் புதிய கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (Bank of Ceylon) அருகாமையில் ஆரம்பித்து நிலைமை என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். சான்வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் சரிவரப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம் S. M. Fernando 580, I-ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1111)

வடமராட்சிப் பகுதியில் பதற்றம் நீடிக்கிறது

இரவில் உறவினரின் வீடுகளிலும் ஆலயங்களிலும் மக்கள் தஞ்சம்

கரவெட்டி, ஏப். 7

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றவரும் நாசகாரக்கண்ணி அடுத்து மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை இராணுவ முகாம்களுக்கு அண்மையில் உள்ள மக்கள் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

இராணுவ முகாம்களில் இருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் வசிக்கும் மக்கள் கூட இரவில் தம் வீடுகளில் தங்காது உறவினர் வீடுகளிலும், ஆலயங்களிலும் தஞ்சம் புகுகின்றனர்.

இந்த வேளை முகாம்களுக்கு பொருள்கள் கொண்டுவந்து ஒதுக்கும் ஹெலிக்கொப்டர்கள் தரை இறங்கும்போது கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றன

இதனால் ஹெலிக் கொப்டர்களைக் கண்டதும் மக்கள் பதற்றமடைகின்றனர்.

கடந்த சில தினங்களாக பருத்தித்துறை இராணுவ கூட்டு முகாமில் இருந்து ஏவப்படும் ஷெல்களினால் பருத்தித்துறைக்கு அண்மையில் உள்ள பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிய வண்ணம் உள்ளனர். (இ-70

கிழக்கிலங்கை அரசியலில் முஸ்லிம் பெண்

அம்பாறை, ஏப் 7

கிழக்கிலங்கை அரசியல் களத்தில் முஸ்லிம் பெண்மணி ஒருவர் விரைவில் குதிக்கவிருக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் ஏ. ஆர் மன்சூரின் பாரியார் ஜனாபா ஸீஹறு மன்சூரே இந்த முஸ்லிம் பெண்மணி ஆவார்.

இந்தத் தகவல் நிந்தவூரில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஜனாபா ஸீஹறு மன்சூரே பகிரங்கமாக வெளியிட்டார். (இ-14)

மக்கள் முகம்

சங்கானை மத்திய ஐக்கிய நாணய சங்கம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

சங்கானை மத்திய ஐக்கிய நாணய சங்கத்தின் புதிய நிர்வாகக் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. அ. நடராசா. செயலாளர் திரு செ. குமாரசிங்கம், பொருளாளர் திரு ச. நல்லையா, உபதலைவர் திரு. நா. கனகசபை.

ஐந்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-10)

அடகு வைத்தோர் சங்க அலுவலகம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ் அடகு வைத்தோர் சங்கத்தின் அலுவலகம் பொது மக்களின் நன்மை கருதி 87, மணிக்கூடு வீதி யாழ்ப்பாணம் (வெலிங்டன் தியேட்டர் சந்தி அருகில் உள்ள மேல்மாடி) என்ற விலாசத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் ஞாயிறு தவிர ஏனைய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை புதிய அலுவலகத்துக்கு வந்து தொடர்பு கொள்ளலாம்.

இப்படி சங்கச் செயலாளர் அறிவித்திருக்கிறார் (இ-எ)

புத்தகமின்றி பரீட்சை எழுத முடியுமா?

வேலணை, ஏப்ரல் 7

தீவுப் பகுதியில் பல பாடசாலைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் ஒழுங்காக வழங்கப்படவில்லை. ஆகவே இப்பகுதி மாணவர்கள் புத்தகமின்றி எவ்வாறு பரீட்சை எழுத முடியும்?

ஊர்காவற்றுறை பிரதேசக் குழுச் செயலாளர் திரு நாகராசா மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபைக் கட்டத்தில் அவர் கலந்துகொண்டு உரையாற்றினார். (இ-167)

வேலணையில் கருத்தரங்கு

வேலணை, ஏப்ரல் 7

வேலணையில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படும் சிறுவர் பாடசாலைகளில் நிர்வாகிகளுக்கான கருத்தரங்கு ஒன்று வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் எதிர்வரும் 19-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை அறவழிப் போராட்டக் குழுவினர் செய்துள்ளனர் (இ-167(

விளையாட்டரங்கு

புனித வளனார் குருமடம் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், ஏப் 7

புனித வளனார் திருவிழாவை முன்னிட்டு புனித வளனார் குருமடத்தில் சினேகபூர்வமான கூடைப் பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

காலையில் புனித வளனார் குருமடக் அணிக்கும், சமலமரிக்கு ஆத்துவக் கல்லூரி அணிக்கும், இடையில் நடைபெற்ற போட்டியில் வளனார் குருமட அணி 32 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

மாலையில் புனித வளனார் குருமட அணிக்கும், புனித மடுத்தினார் குருமட அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் வளனார் குருமட அணி 48 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

வளனார் குருமட அணியின் தலைவராக ரகுவும், குருத்துவக் கல்லூரி அணியின் தலைவராக எட்வினும், மடுத்தினார் குருமட அணியின் தலைவராக யூட்டும் விளையாடினர்.

இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை புனித வளனார் குருமட விளையாட்டுப் பொறுப்பாளர் ஜெயபாலன் செய்திருந்தார். (இ-எ)

பாடசாலைகளுக்கிடையிலான

உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப் 7

யாழ் மாவட்டத்திக் உள்ள பாடசாலைகளுக் கிடையே வட்டாரம், கொத்தணி, ரீதியில் உடற்பயிற்சி போட்டிகள் நடைபெற்று வருகின்றன

இவற்றில் இதுவரை நடைபெற்று முடிந்த வட்டாரங்களின்தும் கொத்தணிகளின்தும் போட்டி முடிவுகள் வருமாறு:-

காங்கேசன்துறை வட்டாரம்

ஆண்கள் 13 வயதுப் பிரிவு:-

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதலாமிடம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி இரண்டாமிடம்

17 வயதுப் பிரிவு:-

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி முதலாமிடம் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி இரண்டாமிடம்.

பெண்கள் 13 வயதுப் பிரிவு:-

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதலாமிடம் அளவெட்டி அருணோதயா கல்லூரி இரண்டாமிடம்

19 வயதுப் பிரிவு:-

அருணோதயாக் கல்லூரி முதலாமிடம்

வேலணை வட்டாரம்

ஆண்கள் 13 வயதுப் பிரிவு:-

செங் அந்தோனிஸ் கல்லூரி முதலாமிடம் நாரந்தனை ரோ. க. பாடசாலை இரண்டாமிடம்

மண்டைதீவு ரோ க. பாடசாலை மூன்றாமிடம்

17 வயதுப் பிரிவு:-

நாரந்தனை ரோ. க. பாடசாலை முதலாமிடம் செங் அந்தோனிஸ் கல்லூரி இரண்டாமிடம்

19 வயதுப் பிரிவு:-

மண்டைதீவு மகாவித்தியாலயம் முதலாமிடம்

பெண்கள் 13 வயதுப் பிரிவு:-

நாரந்தனை ரோ க. பாடசாலை முதலாமிடம் செங் மேரிஸ் மகளிர் பாடசாலை இரண்டாமிடம் தம்பாட்டி அ. த. க. பாடசாலை மூன்றாமிடம்

17 வயதுப் பிரிவு:-

சிறிய புல்ல மகளிர் கல்லூரி முதலாமிடம் நாரந்தனை ரோ க. பாடசாலை இரண்டாமிடம் நாரந்தனை சரஸ்வதி வித்தியாலயம் மூன்றாமிடம்.

19 வயதுப் பிரிவு:

செங் மேரிஸ் மகளிர் பாடசாலை முதலாமிடம் சண்முகநாத வித்தியாலயம் இரண்டாமிடம். (தொடரும்)

செல்வா காட்டிய வழியில் உறுதியுடன் முன்னேறுவோம்

காங்கேசன்துறை ஏப் 7

தமிழ் மக்கள் வாழ்வில் தந்தை செல்வாவுக்கு முக்கிய இடம் உண்டு. மானத்துடனும் நம்பிக்கையுடனும் எம்மை வழி நடத்திய பெரும் தலைவர் அவர் கடவுள் மீது வைத்திருந்த அசைவாத நம்பிக்கையே அவரை தலைவராக உயர்த்தியது அவர் காட்டிய வழியில் உறுதியுடன் முன்னேறுவோம்.

தெல்லிப்பழை கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 91 ஆவது பிறந்த தினக்கொண்டாடிய அஞ்லி நிகழ்ச்சியில் பேசிய வண சாம் ஆல் பிரட் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக மேற்படி ஆலயத்தில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முதலாமிடம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி இரண்டாமிடம்

17 வயதுப் பிரிவு:-

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி முதலாமிடம் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி இரண்டாமிடம்.

பெண்கள் 13 வயதுப் பிரிவு:-

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதலாமிடம் அளவெட்டி அருணோதயா கல்லூரி இரண்டாமிடம்

19 வயதுப் பிரிவு:-

அருணோதயாக் கல்லூரி முதலாமிடம்

சுன்னாகம் பிரசைகள் குழு ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு

சுன்னாகம், ஏப் 7

தமிழ் பிரதேசங்களில் அரச படைகள் நடத்தி வரும் கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்களையும் மோசடோர் ஷெல்ஏவி பொதுமக்களை கொல்லுதலையும் நடவடிக்கைகளையும் கண்டித்தும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்குமாறு சுன்னாகம் பிரசைகள் குழு சகல வர்த்தகர்களையும் தனியார் தொழிற்சாலை அதிபர்களையும் யோக்குவரத்து நிறுவனங்களையும் கேட்டுள்ளது.

அரச படைகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளால் எமது மக்களுக்கு ஏற்பட்ட சகல இழப்புக்களையும் ஈடுட செய்ய உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டும் என ஆரசைக் கோருமும் தீர்மானமும் சுன்னாகம் பிரசைகள் குழுவின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கலந்துகொண்டனர். (இ-27)

மத்திய கல்லூரி மாணவனுக்கு புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம். ஏப். 7

யாழ் மத்திய கல்லூரி மாணவனான, செல்வன் ம. விதியானந்தநேசன் சைப்பிரசினால் வழங்கப்படும் பொறியியல் பீடப் புலமைப் பரிசிலுக்கு உயர் கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (இ)

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

வெளியேற்றம்

உடுப்பிட்டி, ஏப்ரல்7

வல்வெட்டித்துறையில் சமீபத்தில் நடந்த தாக்குதலை அடுத்து நூற்றுக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

(இ-157)

ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களில் கடமையாற்றும் மின்சார அதியட்சகர்களுக்கும். மின்சார ஊழியர்களுக்கும் பலவித ஊக்குவிப்புத் தொகைகளை வழங்க யாழ்ப்பாண அரசாங்க அதிபர்முன்வந்துள்ளார். யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் செயலாளரான அவர் அபிவிருத்திச் சபையின் உயர் அதிகாரிகளோடு கலந்தாலோசித்து இம்முடிவை எடுத்துள்ளார்.

நிலுவையாக உள்ள மின்சார கட்டணங்களை அறவிடுவதில் ஊக்கமுடன் செயற்படும் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.

இச்சலுகை மாவட்ட

சேவை மனப்பான்மை கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்

கரவெட்டி, ஏப் 7

பணிப்பாளர்களின் சேவை மனப்பான்மையும் சிறந்த செயற்பாடுமே கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வழிவகுக்கும்.

உடுப்பிட்டி ப நோ. கூ. சங்கப் பணிப்பாளர்களுக்கான கருத்தரங்கில் யாழ் கூட்டுறவுத் கிளைக் கான தலைமைக் காரியாலய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ் தணிகாசலம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கத் தலைவர் திரு. கு மயில்வாகனம் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது

திரு. தணிகாசலம் மேலும் உரை நிகழ்த்துகையில் கூட்டுறவுத் துறை வாழ்க்கைக்கு இன்றியமையாதது அகும் கூட்டுறவுத்துறை மிகவும் சிறப்பாக இருக்குமானால் மக்களின் வாழ்க்கைத் தரமும் பொருளாதார அபிவிருத்தியும் மேம்படும் என்றார்

பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு கே. சிவராசா சங்க சோர்வுகளும் சட்டநடவடிக்கைகளும் என்னும் தலைப்பிலும், தேசிய கூட்டுறவுச்சபை கே. கணேசலிங்கம் கலந்துரையாடல் என்னும் தலைப்பிலும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ் சிவமயம் கணக்குவைக்கும் முறைகள் என்னும் தலைப்பிலும் உரைநிகழ்த்தினர். (இ-70)

தேவை

பிரபல கொம்பனிக்கு நல்ல அனுபவம் உள்ள டீசல் மெக்கானிக் ஒருவர் தேவை. பஸ்சாரதி லைசென்ஸ் உள்ளவர்க்கும், ஓரளவு எலக்ரிக் வேலை தெரிந்தவர்க்கும் முன் உரிமை வழங்கப்படும். சான்றிதழ்களின் பிரதிகளுடன் 15-4-87-க்கு பிந்தாமல் விண்ணப்பிக்கவும்.

விளம்பர எண். 58, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (2826)

UNIVERSITY OF JAFFNA.

Tender Notice

Tenders are invited from qualified contractors for the following works at University of Jaffna.

1. Supplying and fixing timber furniture at the second floor Chemistry block.
2. Construction of the proposed semi-permanent Shed/Horticulture garden.

Contractors tendering for item 2 should be registered for Rs. 250 000 for civil works with University of Jaffna or Department of Buildings.

Tender forms may be obtained from the Works Engineer. University of Jaffna on payment of Rs. 100/- per tender until 24-04-87.

Drawings for the above works can be inspected at the Planning Branch, University of Jaffna from 20-04-1987 to 23-04-1987 during office hours.

Tenders should be received on or before 04-05-1987 at 10-00 a. m.

The tender board of the University of Jaffna has the right to reject any one or all the tenders.

Registrar
University of Jaffna.

(2825)

யாழ், முல்லை மாவட்ட ஆரம்ப பாடசாலை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள்

மட்டக்களப்பு, ஏப். 7

கல்வித் சேவைக் குழுவினால் யாழ், முல்லை மாவட்ட ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்களும் தற்போது கோரப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர் பிரிவு அடிப்படையில் கோரப்பட்டுள்ள இவ் விண்ணப்பங்களில் பிரகாரம் யாழ் மாவட்டத்தில் 27 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் முல்லை மாவட்டத்தில் 19 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வெற்றிடங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

30-3-87 வரைக்கு மானியில் மேற்படி மாவட்டங்களில் இடம் பெறவிருக்கின்ற பத்திரிகை மூலம் வெற்றிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன

வர்த்தமானி விளம்பரம் பிரகாரம் நேற்று 6 ஆம் திகதிக்கு முன்பு தகுதியான விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

யாழ் மாவட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் விபரம்:—

அம்பகம் 144, அரியாலை கிழக்கு, அனலைதீவு, செம்பியன் பற்று, களபூமி மேற்கு, நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு கிழக்கு, எழுவைமட்டுவால், எழுவைதீவு, இடைக்குறிச்சி, குடத்தனை, கரையூர், கப்பூர், கைதடி வடக்கு, ஊர்காவற்றுறை.

காரைநகர் கிழக்கு, காரைநகர் மேற்கு, மருதங்கேணி, முள்ளியான், மணற்காடு, மிருசுவில், நாவற்கோவில், நாவற்காடு, புத்தூர் கிழக்கு, தொண்டமானாறு உசன், வயாவிளான்.

முல்லை மாவட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் விபரம்:—

அம்பலவன் பொக்கணை, தனுக்காய், கற்சிலைமடு, நண்டுவன், முள்ளிமுறிப்பு, முல்லைத்தீவு, மன்னாகண்டல், மணலாறு, பட்டமுறிப்பு, முள்ளியவளை, நெடுங்கேணி, ஒலுமடு, ஒட்டிசுட்டான்.

புத்து வெட்டுவான், புதுக்குடியிருப்பு இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு மேற்கு, [illegible] விக்குளம், வல்லிபுனம் குளம், மோகமுரம். (இ-21)

இளைஞர் ஆற்றல் உற்பத்தித்துறைக்கு பயன்பட வேண்டும்

பண்டத்தரிப்பு, ஏப். 7

சமுதாய பொருளாதார மேம்பாட்டுக்கு மனிதவளம் பயன்பட வேண்டுமானால் இளைஞர் யுவதிகளின் நேரம், ஆற்றல் உற்பத்தித்துறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

தொழில் உத்தியோகத்தர் திரு. சபா சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்பில் நடந்த தைப்பொங்கல் பொருட்காட்சி ஏலவிற்பனைக்கு முன்னதாக அங்கு குழுமியிருந்த பார்வையாளர் பிரமுகர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

முதல்நாள் பொருட்காட்சியை பண்டத்தரிப்பு பகுத்தறிவாதி ஜெயக்குமார் அடிகள் மங்கள விளக்கேற்ற, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆனையாளர் திரு. நா. நிமலராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (இ-120)

இடமாற்றம் செய்யப்படுவர்

கிளிநொச்சி, ஏப் 7

கல்லூரி திணைக்கள கண்காணிப்புப் பொறியியலாளர், மாவட்டப் பொறியியலாளர் அலுவலகங்களில் தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு மேல் கடமையாற்றி வரும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றி வரும் எழுதுவினைஞர்கள் ஆகியோர் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

எதிர்வரும் மூன்று மாத காலத்துள் இவை நடைமுறைப்படுத்தப்படும்.

கொழும்பு தலைமை அலுவலக கட்டட திணைக்கள பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்ட

காலதாமதமாக செலுத்தப்படும் கட்டணங்களுக்கான தண்டப்பணம் கவிவிருந்து வழங்கப்படும். (உ-16)

2-ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு: 11-07-1935

உதிர்வு: 07-04-1985

பொன்னம்பலம் - சுப்பிரமணியம்

ஆண்டே எம் ஆருயிரே அரும் பொருளே
கண்பிரிவாக் நாள்தோறும்
நலிகின்றோம் ஐயா
உனைப்பிரிந்த இன்றோடு ஈராண்டு சென்றாலும்
உன்றனுடன் நிழலாக நிலைகின்றாயா
நிறைகின்றதையா
என்றென்றும் நீயுரைத்த புத்திமதி
எம்வாழ்வில்
நின்றெம்மை வழிநடத்தி வருகின்றதையா
நன்றெனநீ நமக்காகச் செய்த செயலெல்லாம்
விண்தோன்றும் ஆதவன் போல்
ஒளிர்கின்றதையா.

(1177) இ. சிக்கராசா குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

உள்ளம் தூய நிலையை அடைந்து நறுமணமாழ்க்கை வாழ விருப்பினால், பக்தியை உறுதியாகக் கொண்டு தியானமும் உபாசனையும் மெள்ள நடத்தித் கொண்டு போக வேண்டும்.

— ராஜ ஜி

உதயன்

இல.10,[illegible] தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம். 07-04-1987 த.பெ.இல 18

நிபந்தனைக்கு நிபந்தனையா?

இலங்கைத் தமிழரைப் படுகொலையிலிருந்து காப்பாற்றுவதற்கு, சர்வதேச அமைதி காக்கும் படை ஒன்றை இலங்கைக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் இனப்படுகொலை செய்யப்படுவதை நிறுத்த உழைக்கும் சர்வதேசக்கமிட்டி இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

தமிழர் நலனில் அக்கறை கொண்ட ஏனைய இந்தாபனங்கள் பலவும் இவ்வாறான கோரிக்கையை ஏற்கனவே முன்வைத்தது உண்டு.

ஆனால் சர்வதேச சமாதானப் படையை இங்கு நிறுவிக்க இலங்கை அரசு தானாக இணங்க வேண்டும் அல்லது ஐ.நா. பொதுச் சர்வதேச ஸ்தாபனம் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றிக் வேண்டும். இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகள் ஒன்று சேர்ந்து, சமாதானப்படை வருவதற்கு அனுமதிக்கும் வரை உதவியை நிறுத்துவதாக முடிவு செய்து அதை முழுக்க முழுக்கச் செயலாக்குவதன் மூலமும் இலங்கையை வழிக்குக் கொண்டுவர முடியும்.

இனப்பிரச்சினை விவகாரம் இப்போதுள்ள நிலையில் இந்தியாவும் சர்வதேச சமாதானப் படை ஒன்றை இங்கு நிறுவிக்க உதவ முடியும்.

இனப்பிரச்சினையைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கான முயற்சியில் இந்தியா சிறிது கால இடைவெளியின் பின்னர் மீண்டும் இறங்கி உள்ளது.

தமிழ் மக்கள், துயிழ்ப் போராளிகளின் மீதான தாக்குதல்களை நிறுத்தி, எறிபொருள் தடையையும் முற்றாக நீக்கினால் தமிழர் அமைப்புகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவர முடியும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி கனுப்பிய கடிதத்திலே ஜே.ஆருக்கு அறிவித்திருக்கிறார்.

போராளிகள் முதலில் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செய்யின் பிரதமர் காந்தி விடுத்திருக்கும் இரண்டு நிபந்தனைகளையும் நிறைவேற்ற முடியும் என்றும் ஜே.ஆர் பதில் அனுப்ப இருப்பதாக அறியப்படுகிறது.

ஆகவே இங்கு தாக்குதலை யார் முதலில் நிறுத்துவது என்ற இக்கலான விஷயம் முன் எழுந்து நிற்கிறது.

அரசாங்கப் படைகள் தமிழ்ப் பகுதிகளிலிருந்து வாபஸ் வாங்கப்பட்டால் போராளிகளும் ஆயுதமும் மோதும் சந்தர்ப்பமே இல்லை. அதனால் தாக்குதல் செய்ய மனமில்லை என்றாலும், படைகளை முகாம்களுக்குள் முடக்கி வைத்தாலாவது போராளிகள் — படைகள் மோதுவதை தவிர்க்கலாம். முகாம்களுக்குள் முடக்குவது என்பதில் அடங்கியிருக்கும் தாக்குதலை நிறுத்துவதும் அடங்க வேண்டும்.

அரச படைகள் மக்களை அழிக்க முற்படும் போதே போராளிகள் தாக்குகிறார்கள். அதாவது போராளிகளின் இராணுவ நடவடிக்கைகள் எப்போதும் தற்காப்புத் தாக்குதல்களாகவே (Defensive) இருக்கின்றன; இராணுவ ஒழிப்புத் தாக்குதல்களாக (Offensive) இல்லை.

எனவே அரச படைகள் மக்கள் மீதான, போராளிகள் மீதான தாக்குதல்களை நிறுத்தினால் போராளிகளாகவே நிற்கும் சாத்தியம் உருவாகும். இதனை ஒரு முறையாவது பரீட்சித்துப் பார்க்க அரசு விரும்புவதாக இல்லை. முன்னர் ஒரு தடவை ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்து விட்டு, தானே அதை மீறியும் செயற்பட்டு வந்தது.

இப்போது, பேச்சுக்களை மீண்டும் தொடர்வதற்கு, அரச படைகள் முதலில் இராணுவத் தாக்குதல்களை நிறுத்தவேண்டும் என்று போராளிகள் சார்பில் இந்தியா கேட்கிறது. போராளிகள்தான் முதலில் நிறுத்தவேண்டும் என்று இலங்கை பதில் நிபந்தனை விதிக்கிறது. பூசணிக்கு மணி கட்டுவது யார் என்ற கேள்வி மீண்டும் தோற்றுவிக்கப்பட்டுக்கிறது.

இந்தச் சிக்கலிலிருந்து விடுபடுவதற்கு சர்வதேச சமாதானப் படை ஒன்றை உடனடியாக இங்கு அழைப்பது மிகவும் உகந்த மார்க்கமாகும். அதனை இந்தியா வலியுறுத்துவதற்குத் தகுந்த நேரமும் இதுவேயாகும்.

இலங்கைக்கு அரசியல் தீர்வில் உண்மையாகவே நாட்டம் உண்டா என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் சர்வதேச சமாதானப் படையை தருவிக்கும் யோசனை வெளிதும் உதவும்.

ஆகவால் சர்வதேச சமாதானப் படையைத் தருவித்து, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என இந்தியா இலங்கையிடம் வற்புறுத்துவதன்மூலம் தமிழர் அழிவைத் தடுக்கலாம். தனது மத்தியஸ்தப் பணியில் இதனையும் ஒரு பரீட்சையாக அது செய்து பார்க்கட்டும்

யாழ் பல்கலைக்கழத்தில ஜீ.ஏ- கியூ பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

வெளி நிலை பல்கலைக் கழக பரீட்சைகள் (ஜீ.ஏ கியூ) யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் நடைபெற்றுவந்த வெளி வாரி பட்டதாரிப் பரீட்சைகளை மாணவர்களின் கடும் முயற்சி காரணமாகவே யாழ் பல்கலைக் கழகத்தில் நடத்துவதற்கு பேராதனைப் பல்கலைக் (4-ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்டனிடமிருந்து போர்க் கப்பல்களை பாகிஸ்தான் வாங்கும்

லண்டன், ஏப்ரல் 6

பிரிட்டனிடமிருந்து யுத்தக் கப்பல்களைக் கொள்வனவு செய்வது பற்றியும் மீண்டும் பொது நல அமைப்பில் சேர்ந்து கொள்வது பற்றியும் பாகிஸ்தான் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது.

இவ்வாறு பிரிட்டனுக்கு எட்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் முகமட் கான் ஜூனேஜோ கருத்து வெளியிட்டார்.

ஆப்கானில் தலையிடுதல் கொண்டுள்ள ரஷ்யத் தருப்புக்களினால் பாகிஸ்தானுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றியும் ஜூனேஜோ தலைவர்களுடன் கலந்துரையாடுவார்.

பாகிஸ்தானின் தஞ்சம் புகுந்துள்ள 30 லட்சம் ஆப்கான் அகதிகளுக்கும் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்க பிரிட்டனிடமிருந்து உதவிகளையும் போர் ஆயுதங்களையும் பாகிஸ்தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

அணுசக்தி உற்பத்திக்கும் பாக். பிரதமரின் இந்த விஜயம் பிரிட்டனிடமிருந்து உதவிகளைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த இருபது வருடங்களில் பாக் பிரதமர் ஒருவர் பிரிட்டன் செல்வது இதுவே முதற்தடவையாகும். (ஒ) டது.

மாணவர் பொலீஸ் மோதல்

டாக்கா, ஏப்.6

பங்களாதேஷின் நேற்று மாணவர்களுக்கும் பொலீஸாருக்கும் மோதல்கள் நடந்தன.

இச்சம்பவத்தில் உதைகளும் சிறிய வெடிகுண்டுகளும் வீசப்பட்டதில் 150 மாணவர்கள் உட்பட 175 பேர் காயமடைந்தனர்.

ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த மோதல்களில் 37 பொலீஸார் காயமடைந்தனர்.

சலுகைக் கட்டணத்தில் திரைப்படம் ஒன்றைப் பார்க்க மாணவர்கள் விரும்பியதால் இச் சண்டை ஆரம்பமாகியது. (ஒ)

அகதிகள் மீதான கட்டுப்பாட்டுக்கு ஆதரவு

ஜெனீவா, ஏப். 6

கனிஸ்ஸர்லாந்தில் அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பதை கட்டுப்படுத்தும் திட்டத்திற்கு மேலும் கண்டிப்பான சட்டங்களை விதிக்கலாம் எனக் கோரும் கனிஸ் அரசின் யோசனைக்கு பலத்த வரவேற்புகிடைத்துள்ளது

நேற்று நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பில் இவ்வாறு தெரிய வந்துள்ளது

அரசியல் தஞ்சம் கோருவோரை மேலும் கண்டிப்பான வகையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற யோசனைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன.

1979ஆம் ஆண்டு ஆமோதிக்கப்பட்ட அகதிகள் குறித்து நடைமுறைப்படுத்த சட்டங்களை இந்தப் புதிய விதிகள் மாற்றி அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

ஏனை உலகில்

போர் நிறுத்தம் அமுல் என லெபனான் அறிவிப்பு

பெய்ரூட், ஏப் 6

லெபனானில் பாலஸ்தீனிய முகாம்கள் மீது முழு அளவிலான போர் நிறுத்தம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

சிரியா அமைத்த மக்கள் படையினர் இதனை அறிவித்தனர்

இரண்டு அகதிமுகாம்களுக்கு உணவுப்பொருள்களையும் மருந்து வகைகளையும் கொண்டுபோக விடாமல் கடந்த ஐந்து மாத காலமாக நடைபோட்ட பின்னர் போர் நிறுத்தம் செய்வதாக சிரியா ஆதரவுடன் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

எனினும் உதவிப் பொருள்கள் தொடர்ந்தும் வழங்கப்படாவிடில் அமைதி மக்கள் படையினரிடம் அனுமதிபெற்ற பின்னர் நேற்று பெய்ரூட்டில் தொடர்ந்தும் சண்டை நடந்ததாகத் தெரிகின்றது (ஒ)

மன்னர் விஜயம்

ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் குறிய கால விஜயத்தில் மொஸ்கோ சென்றார். மத்திய கிழக்கு நாடுகளின் நெருக்கடி நிலை தொடர்பாக இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது. நெதர்லாந்து, பெல்ஜியம், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் அவர் செல்வார். (ஒ)

அணுசக்தி கப்பல்கள் நடமாட்டத்தால் அச்சம் என்கின்றார் ஷெயில் சிங்

விசாகப்பட்டினம், ஏப் 6

இந்து கடல் சமுத்திரத்தில் வல்லரசுகளின் நவீன ஆயுதங்களுடன் கூடிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் நடமாடுவது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இப்படி ஜனாதிபதி ஷெயில் சிங் தெரிவித்தார்.

இந்தியக் கடற்படையின் மிழக்கத்திய பிரிவுக்குக் கொடி வழங்கும் வைபவத்தில் திரு. ஷெயில் சிங் நேற்று கலந்து கொண்டார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்பு அமைச்சர் வி.பி. சிங், கடற்படைத் தளபதி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-எ)

விண்கலம் தவறியது

மாஸ்கோ, ஏப் 6

ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சிக் கலம் உலகை வலம் வரும் ஆளியக்கும் எம்.ஐ.ஆர். நிலையத்துடன் இணைவதற்குத் தவறிவிட்டது.

எம்.ஐ.ஆர். நிலையத்திற்கு 180 மீட்டர் அருகே அக்கலம் சென்றபோது அதன் கட்டுப்பாட்டு முறை சரிவர இயங்க மறுத்ததால் இணைக்கும் பணியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தக் கலம் கடந்த செவ்வாய்க்கிழமை செலுத்தப்பட்டது. (ஒ)

மொழிப்பற்றே எம்மை உலக அரங்கில் உயர்த்தியது

முத்தமிழ் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப்.7

தமிழ் மொழி மீது நாம் கொண்ட பற்றுதலே இன்று எம்மை மனிதர்களாக உலக அரங்கில் எடுத்துக் காட்டியுள்ளது அப்படியிருந்தும் தமிழின் பெருமையை— அதன் ஆழத்தை— சிந்திப்பவர்கள், அறிபவர் தகுப்பவர்கள் எம்மத்தியில் குறைவாகவே காணப் படுகின்றனர்.

—இவ்வாறு கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் கூறினார்.

கொழும்புத்துறை புனிதவளனார் குருமடம் முத்தமிழ்மன்ற விழா, மன்றத் தலைவர் தி. எமிலியானுஸ் தலைமையில் ஞாயிறு நடைபெற்றது.

இவ்விழாவில் 'கவிதையின் கலை' பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுகையிலேயே திரு. ஜெயராஜ் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்;

தமிழர் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு பண்டைய தமிழ் இலக்கியங்கள் வழிவகுக்கின்றன.

தமிழ்த்தாய் அன்று மரபுக்கவிதை எனும் காரிகையின் துணிச்சேலை அணிந்திருந்தாள். இன்று புதுக்கவிதை என்றும் நைலெக்ஸ் சேலையை அணிந்துள்ளாள்— என்றார்.

புனிதவளனார் குருமடம் முத்தமிழ் மன்ற மாணவர்களாக 'ஏணிப்படிகள்' எனும் கையெழுத்துப் பத்திரிகையும் அங்கே வெளியிடப்பட்டது.

அதிபர் திரு அல்பிரட் அறிமுகவுரை ஆற்றுகையில்;

சமயமும் இலக்கியமும் பின்னிப் பிணைந்தவை. கிறிஸ்துநாதர் கூட ஓர் இலக்கியவாதியே.

சமுதாயத்தை திருத்துவதே உண்மையான இலக்கியவாதி.

திருக்குறள் போன்று பையினும் ஓர் இலக்கியமே என்றார்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் 'நாணம் பேணும்' எனும் பொருள் பற்றி உரையாற்றுகையில்—

நான் பேசுவதையும் எழுதுவதையும் தனது வாழ்வில் கடைப்பிடிப்பவனே உண்மையான கவிஞன்.

சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தனது எழுத்தையும் பேச்சையும் பயன்படுத்துபவனே உண்மையான மனிதன்.

எழுத்தாளனும், பேச்சாளனும் தமது நாட்டுக்கு மட்டுமன்றி உலகம் முழுவதற்குமே மத்திரி போன்றவர்கள் என்றார்.

இவ்விழாவில் இறுதியில் நாடகக் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

செம்பியன் செல்வன், டாக்டர் ராஜரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

புனித வளனார் குருமடம் முத்தமிழ் மன்ற காப்பாளரும் 'நான்' சஞ்சிகையின் ஆசிரியருமான அருட்திரு விக்ரன் பற்றிக் இவ்விழாவை நெறிப்படுத்தியிருந்தார். (உ-ள)

புன்னாலைக்கட்டுவனில் சயரோகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

இலங்கைத் சயரோக தடுப்புச் சங்கத்தின் ஆதரவில் புன்னாலைக்கட்டுவன் கிராமத்தைச் சேர்ந்த மத்தாளோடை திடற்புலம் ஆகிய இடங்களில் சயரோகம் பற்றிய கருத்தரங்கும், சயரோகத்தை கண்டு பிடிப்பதற்கான சளிப்பரிசோதனையும் நடத்தப்பட்டன.

சுகாதார பரிசோதகர் திரு.எஸ். அரசலிங்கம் சயரோக தடுப்பு சங்க சுகாதார மேற்பார்வையாளர் திரு ஏ பேரானந்த நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சயரோக தடுப்பு சங்க வலி தெற்கு பிரதேச இணைப்பாளர் செயலாளர் திரு.ச. முருகேசன் நிர்வாக உறுப்பினர் திரு மதி கு. கனகரட்ணம் ஆகியோரால் மேற்படி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய சுகாதார மேற்பார்வையாளர் திரு ஆ பேரானந்தநாயகம் பேசுகையில் சயரோகம் உண்டாகும் காரணிகளையும் அதன் பரவலையும் தடுக்கும் வழிகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார் இந்நோயைக் கண்டறிவதற்கு பெரிதும் சிரமம் இருப்பதாகவும் அதற்கு பொதுவைத்தியர்கள், சமூக சேவை நிலையங்கள், சுகாதார தொண்டர்கள் ஆகியவை உதவ முன்வர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

சுகாதார பரிசோதகர் திரு. எஸ். அரசலிங்கம் உரையாற்றுகையில் சயரோக நோய்களான அறிகுறிகளாக உடம்பு மெலிதல், சாப்பாட்டில் மனமின்மை தொடர்ச்சியான இருமல், இரவில் நடுக்கத்துடன் கூடிய காய்ச்சல் ஆகியன தெரிவிக்கப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள சுகாதார நிலையத்திலோ அல்லது மருத்துவ மாதுவிடமோ தொடர்பு கொள்ளும்படி கூறினார்.

இந்நோய் ஆரம்பத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டால் மிகவும் இலகுவாக குணப்படுத்த முடியும் எனவும் இது பற்றி எதுவித பயமோ கவலையோ கொள்ளத் தேவையில்லை. இது ஒரு தொற்று நோய் அல்ல என்றும் கூறினார். (ஒ)

ஆலய செய்திகளில்

முருகன்ஆலய வருடாந்த உற்சவம்

திருநெல்வேலி, ஏப்ரல் 7

கொக்குவில் மேற்கு மணியர் பதி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்தாத் தினங்களுக்குச் சிறப்பாக உற்சவம் நடைபெற விருக்கின்றது.

10ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத்திருநாளும் 11ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் 13 ஆம்திகதி திங்கட்கிழமை பூங்காவனமும் நடைபெறும். (இ-143)

வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

யாழ்ப்பாணம் அத்தி மடு ஸ்ரீ நடராஜ வீரத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

மஹோற்சவத்தை பிரம்மஸ்ரீ இ. நாராயணக் குருக்கள் நடத்தி வைப்பார்

எதிர் வரும் புத்தாண்டு தினத்தில் ரதோற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ)

காரைநகருக்கு தனி உதவி அரச அதிபர் பிரிவு?

ஊர்காவற்துறை, ஏப்.7

தற்போது ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட் அடங்கும் காரைநகர் பிரதேசத்தை தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்றுக்குள் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் மக்கள் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு வருவதில் உள்ள போக்குவரத்துக் கஷ்டங்களைக் காரணமாகக் கொண்டும், மேலும் அது பரந்த நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசமாக இருப்பதாலும் இதற்கான தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவை ஏற்படுத்த அரசின் அதிகாரிகள் இணக்கமுடையதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் ஒவ்வொரு [illegible]களிக் கிழமைகளிலும் காரைநகரில் உள்ள கற்றுலா அலுவலகத்திலே பணியாற்றுகிறார் (இ-16)

செய்திக்கொத்து

மாதிரிப்பண்ணை

உடுப்பிட்டி, ஏப். 7

மறைந்த போராளி சிறிஸ்கந்தராஜனின் ஞாபகமாக உயர கதிர் காமம் ஆரம்ப சுகாதார நிலைய வளவிலுள் மாதிரிப் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் முப்பதாயிரம் ரூபா செலவில் அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ள இம்மாதிரிப்பண்ணையில் ஆடு, மாடு, கோழி, தாரா, முயல் போன்ற கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

அறுநூறுக்கு மேற்பட்ட இறைச்சி, முட்டையிடக் கோழிகள் இப்பண்ணையில் உள்ளன. (இ-157)

முகாமை ஞாபகப்படுத்தும் ஷெல்கள்

ஊர்காவற்துறை, ஏப். 7

காரைநகரில் அமைந்துள்ள கடற்படையினரின் முகாமிலிருந்து விட்டுவிட்டு ஏவப்படும் ஷெல்கள் இம்முகாமை ஞாபகப்படுத்துவதாக இப்பகுதி மக்கள் பேசிக் கொள்கின்றார்கள்.

நீண்ட காலமாகக் கடற்படையினர் இம்முகாமிலிருந்து வெளியேற முயற்சிக்கின்றனர். இதனால் பொதுமக்களும் இவர்களுக்கும் மோதல்கள் ஏற்படவாய்ப்பில்லை எனவும் பேசிக் கொள்ளப்படுகின்றது (இ-16)

இடமாற்றம்

ஊர்காவற்துறை, ஏப். 7

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் ஊர்காவற்துறை அலுவலகத்தில் எழுது வினைஞராகக் கடந்த நான்கு வருடங்களாக கடமையாற்றிய திருமதி கே. ஆர். சிவலிங்கம் இம்மாதம் தொடக்கம் நாரந்தனை உப அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-16)

நேர்முகப் பரீட்சை

வட்டுக்கோட்டை, ஏப் 7

வட்டுக்கோட்டை பிரதேச பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்றது

யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு.கே. இராமநாதன், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு எஸ். குலசேகரம், யாழ்; மாவட்டப் பதிவாளர் திரு எஸ். இராசையா ஆகியோர் இந்த நேர்முகப் பரீட்சையை நடத்தினர். (இ-161)

பொய்யாமொழி

குறள்:

அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

பொருள்:

அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும்; அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BECON
(C 156/3 விராக்வி வீதி யாழ் நகர்)
MATHS ... திரு. நக்கீரா
PHYSICS ... திரு. யோகானந்தா
CHEMISTRY ... திரு பாபு
BOTANY ... திரு சர்வானந்தா
ZOOLOGY ... திரு தம்பிராஜா
வகுப்புகள் ஆரம்பம்
(1165)

உதயன்

07-04-1987 செவ்வாய்க்கிழமை

BECON
(யாழ் ஸ்ரீதர் சினிமா முன்பாக)
பொருளியல் ... திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு மரியதாஸ்
வர்த்தகம் ... திரு. ரட்ணம்
அளவையியல் ... திரு S S மனோகரன்
இந்துநாகரீகம் — திருமதி அருள்நகிலை
தமிழ் — திரு நாகேஸ்வரன்
புவியியல் — திரு பாலா, சன்
வகுப்புகள் ஆரம்பம்
(1165)

கோட்டை வங்கி அலுவலகங்கள் இயங்கவில்லை

குடாநாட்டில் பணப் புழக்கம்; பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ் கோட்டை முகாமில் உள்ள வங்கிகளின் கிளைகள் கடந்த சில வாரங்களாக இயங்காததன் காரணமாக குடாநாட்டில் பணப்புழக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் வங்கிக் கணக்குகளில் இருக்கும் பெறுமதிக்குப் பணத்தைப் பெறமுடியாது மக்கள் திண்டாடுகிறார்கள்.

பணப்புழக்கத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பாக குடாநாட்டின் வர்த்தகத்துறையில் பெரும் நெருக்கடி உருவாகியிருக்கிறது. இத்தகு நீடித்தால் குடாநாட்டு வர்த்தகத்தில் பெரும் முடக்க நிலை ஏற்படும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டை முகாமுக்குச் சென்று வேலை செய்வதற்கு வங்கி ஊழியர்கள் அச்சம் தெரிவித்து வருகிறார்கள். இதனால் கோட்டை வங்கிக்கிளைகள் செயலிழந்து போய் உள்ளன. உள்ளூர் தொலைபேசிச் சேவையும் முற்றாகச் செயலிழந்து போய் உள்ளதால் கோட்டை முகாமுடன் தொடர்பு கொண்டு கோட்டைக்குள் போவதற்கான முன் அனுமதியை வங்கி அதிகாரிகள் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

முன் அனுமதி பெறாமல் கோட்டைக்குள் செல்வது மிகவும் ஆபத்தானது என வங்கி ஊழியர் தெரிவித்துள்ளனர்.

இதனால் கோட்டை வங்கி அலுவலகம் தற்போது இயங்கக் கூடிய சூழ்நிலையில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பணத்தைத் தருவித்துக் கோட்டை அலுவலகம் மூலம் குடாநாட்டுக்கு அதனை விநியோகிக்கும் வேலையாவது இதனால் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

தற்போது கோட்டை வங்கி இயங்காததால் குடாநாட்டை விட்டு வெளியே போகும் பணநோட்டை ஈடுசெய்யும் வகையில் நோட்டுக்களை குடாநாட்டிற்குக் கொண்டு வந்து விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது

இதனால் குடாநாட்டில் உள்ள பணநோட்டுக்கள் குறைந்து பெரும் நெருக்கடி நிலை உருவாகும் என எச்சரிக்கை தெரிவிக்கப்படுகிறது (உ)

விடுதலை குறித்து அறிக்கை

இணை அமைச்சர் பிரதாபாதிக்கு வேண்டுகோளின் பேரில் தான் ஆனந்த விகடன் ஆசிரியர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்திரா காங்கிரஸ் தமிழ் நாடு கமிட்டித் தலைவர் திரு எம் பழனியாண்டி நேற்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்

திரு. பாலசுப்பிரமணியன் விடுதலை செய்யும் உத்தரவை சபாநாயகர் பிறப்பி // ப்ப (ர இந்த அறிக்கையை திரு. பழனியாண்டி வெளியிட்டார். (இ-ம)

இந்து மகளிருக்காக 36 ஆண்டு காலம் உழைத்த உத்தமப் பெண்மணி

பணிப்பாளர் இரங்கற் செய்தி

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ் இந்துமகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்காக 36 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக அளப்பரிய சேவையாற்றிய அன்னாரின் மறைவுக்கு கலங்கிக் துயர் மேலிழப்பு ஆகும்.

முன்னாள் அதிபர் செல்வி பத்மா இராமநாதனின் மறைவு குறித்து விடுத்த இரங்கற் செய்தியில் யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திருப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் விடுத்த அனுதாபச் செய்தியில் —

நல்லமைத்துவப் பண்பு களாலும் சைவத் தமிழ்ப்பண்பாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்த முறையிலும் பெண்களின் கல்வித் தரத்தை உயர்த்த முயன்றவர் செல்வி இராமநாதன்' — என்று தெரிவித்தார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி, இந்து மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோரும் இரங்கல் செய்திகளை விடுத்துள்ளனர். (உ-எ)

இன்று...

(1ம்பக்கத்தொடர்ச்சி)

அரச படையினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டதைக் கண்டித்தும் -- இன்னமும் கடைஅடைப்பும் ஹர்த்தாலும் மேற்கொள்ளப்படவுள்ளன

இன்று போக்குவரத்துச் சேவைகளும் விநியோகமடையலாம் என எதிர்பார்க்கப் படுகிறது

யாழ் செயலகம் முன் கூடும் யாழ் வர்த்தகர்கள் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர். (இ-10)

யாழ். இந்து - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அணிக்குத் தகுதி வகித்தசாதனைகளைபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

பிரபல்யமான கிரிக்கெட் வீரர் தெரிவுக்கான வாக்களிப்பின் இறுதி நிலை வருமாறு:-

	பெயர்		வாக்குகள்
1	பெர. பிரபாகரன், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)	—	36,336
2.	எல். கிருபானந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)	—	24,991
3.	ஏ. வாசீசன், (செண். ஜோன்ஸ் கல்லூரி)	—	11,586
4	பி. புவனேந்திரகுமார், (மானிப்பாய் இந்துக் கல்லூரி)	—	6,150
5.	க. டெரிமகான், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)	—	3,831
6.	எல். நித்தியராஜன், (யாழ்ப்பாணக் கல்லூரி)	—	3,294
7.	ஆர் பி செல்வரத்நாகம், (செண் பற்றிக்ஸ் கல்லூரி)	—	1,890
8.	கே. எல். ரவிக்குமார், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).	—	1,554

(உ)

பிரபல்யமான கிரிக்கெட் வீரர் தெரிவு 1987

(இறுதிவார வாக்களிப்பு அதிஷ்டசாலிகள்)

மிகப் பிரபல்யமான கிரிக்கட் வீரருக்கு வாக்களித்து ஐம்பது ரூபாவைப் பரிசாகப்பெறும் இரு அதிஷ்டசாலிகள்

திரு. ம. வாசீசன்
மிதிலை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

திரு. ச. வேல்மாறன்
துளசி,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

இவ்வார வாக்களிப்பில் பங்குபற்றி ஒரு மாதத்துக்கு உதயன், சஞ்சீவி பத்திரிகைகளைப் பெறுவதற்கான பத்திரங்களைப் பெறும் அதிஷ்டசாலிகள்

திரு. சு. பரராஜசிங்கம்
76 ஏ, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

செல்வி சர்மிளா
5, வேம்படி ஒழுங்கை,
தாவடி தெற்கு,
தாவடி.

— கிரிக்கெட் போட்டிக் குழு

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மிக்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் விதானந்தராசா அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 07 - 04 - 1987 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 / N / 87 Telephone, 24805, 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களை நோக்கிஹெலி துப்பாக்கிச்சூடு

அச்சுவேலி, ஏப். 7

மட்டுவில் பத்திரகாளி அம்மன் கோவில் வருஷாபிஷேக திருவிழாவுக்குச் சென்று திரும்பிய பக்தர்களை நோக்கி ஹெலிக் கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

இதனால் ஆலயச் சூழலில் பெரும் பதற்றம் நிலவியது.

கொதிக்கும் வெயிலில் பக்தர்கள் பாதுகாப்புத் தேட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது (இ-11)

வீடுகளைப் பார்வையிட சென்றவர்களைச் சிப்பாய்கள் அழைத்துச் சென்றனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

இராணுவ அரசபாதுகாப்பு அதிகாரிகளால் இடம் பெயர்ந்தவர்கள் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றபோது தங்கியிருந்த இராணுவத்தினரால் கைகள் கட்டப்பட்டு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வயாவிளான் பகுதியில் இடம்பெற்றது

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன், மருமகன் ஆகியோரே முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்

இவர்கள் அண்மைக் கால அரசபாதுகாப்பாளரால் வயாவிளான் பகுதியிலிருந்து இடம் பெயர்த்திருந்தனர்

சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை தமது வீட்டையும், தமது பயிர்களையும் பார்வையிடச் சென்றனர்

அப்போது அவர்களது வீட்டுக்குள் மறைந்து இருந்த இராணுவத்தினர் திடீரென வெளிப்பட்டு அவர்களை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்

அவர்களுடன் சென்ற ஏழு வயது இளைஞனை இராணுவத்தினரை கண்டதும் மரங்களுக்குள் மறைந்திருந்த பிறந்த சேர்ந்தான் (இ-எ)

ஷார்ஜா கிரிக்கெட் 10இல் முடிவு

துபாய்ஏப்.7

ஷார்ஜா கிண்ணத்துக்கான நான்கு நாடுகள் பங்கு பற்றும் கிரிக்கெட் போட்டிகள் ஏப்ரல் 10 ஆம் திகதியுடன் முடிவடைகின்றன.

நடக்கவிருக்கும் போட்டிகள் வருமாறு

ஏப்17- பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து

ஏப்19- இங்கிலாந்து எதிர் ஆஸ்திரேலியா

ஏப்10 - இந்தியா எதிர் பாகிஸ்தான். (இ-எ)

6 கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு, ஏப். 7

தீவிர பாதுகாப்புடன் வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டு இருக்கும் 6 தமிழ்க் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் ஒன்றை நேற்றில் இருந்து ஆரம்பித்துள்ளனர்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல் கடந்த 3 மாதங்களுக்குமேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்த 6 பேரும் தீவிர பொராளிகள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகித்துள்ளன.

சாகும்வரை இந்த 6 பேரும் உண்ணாவிரதம் இருப்பர் என்று அவர்களின் சகோதரர் தெரிவித்தார். (உ-ம்)

வீடுகளே...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வல்வரைகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

ஆயுதங்கள் உற்பத்தி செய்வதற்கு பாவிக்கப்படுத்தப்படும் பணத்தில் ஒரு பகுதியை வீடமைப்புப் பணிக்கு வல்லரசுகள் செலவிட வேண்டும்.-

எமக்குத் தேவை வீடுகளே; குண்டுகள் அல்ல- இப்படிப் பிரதமர் பிரேமதாச சொன்னார். (இ-எ)

மனிதாபிமான உதவி வழங்கப்போவதாக இந்தியா அறிவித்த பின்பே தாக்குதல் தீவிரம்

சென்னை, ஏப் 6

மனிதாபிமான உதவியை வழங்குவோம் என்று இந்திய தரப்பில் கூறப்பட்டதைத் தொடர்ந்தே இலங்கை இராணுவத்தின் தாக்குதல் மேலும் அதிகரித்தது

தமிழீழ விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு எம் கே. ஈழவேந்தன் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

ஈழவேந்தன் அறிக்கை

இதுசம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் திரு ஈழவேந்தன் மேலும் கூறியிருப்பதாவது;

தமிழருக்கு எதிராக இலங்கை அரசு விடுத்துள்ள பொருளாதார முற்றுகை பற்றி இந்தியா எச்சரிக்கை விடுத்தது எச்சரிக்கைக்கு ஆகாவாக எந்த நடவடிக்கையையும் பின்னர் இந்தியா எடுக்கவில்லை.

மனிதாபிமான உதவி என்று இந்தியா சொன்னதைத் தொடர்ந்து இராணுவத்தின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல் தான் அதிகரித்தன.

பொருளாதார முற்றுகையினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழருக்கு உணவுப் பொருட்கள், மருந்து மற்றும் உதவிகளை இந்தியா அனுப்பி வைக்க வேண்டும் —

இப்படி திரு. ஈழவேந்தன் கோரிக்கை விட்டிருக்கிறார். (இ-எ)

ஹெலியிலிருந்து சிப்பாய்கள் இறக்கப்பட்டனர்

முழங்காவில், ஏப்ரல் 7

ஞாயிறு அதிகாலை பல்லவராயன்கட்டுவில் வெளியான பகுதி ஒன்றில் ஹெலியிலிருந்து இராணுவம் இறக்கப்பட்டது.

ஒரு பகுதியினர் ஜெயபுரம் நோக்கியும், மற்றும் ஒரு பகுதியினர் ஈராஞ்சி நோக்கியும் நடைபவனியாக ரோந்து சென்றனர்.

இராணுவ ரோந்திலே போது ஏற்பட்ட சேதவிவரம் கிடைக்கவில்லை

இப்பகுதி மக்கள்பயத்தினால் வீடுகளில் தஞ்சம் அடைந்தனர். (இ-91)

Calling All Jaffna Surveyors

ANNUAL GET TOGETHER, MEETING AND C. P D. PROGRAMME OF THE JAFFNA SURVEYORS. Date 10th, 11th April'87 9 a. m. Venue: The Catechetical Centre, Jaffna.

மறைக்கல்வி நடுநிலையம்

All most opposite the Junction of Temple Road & Main Street.

T. Somasekaram,
President, S. I. S. L.
(1179)

பிரயாண ஒழுங்குகள் குவைத்

பின்வருபவர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.

* தொழிலாளர்: (Labour)
* தச்சுவேலை (Carpenter)
* மேசன் (Mason)
* கனரகவாகன சாரதி (H. E. Operator H. D. Driver)

பாஸ்போர்ட் 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்

கொழும்பு முகவரி:

Construction & Development Ltd.
37, Jeyasingha Mawatthe,
NUGEGODA.

V. P. பாலா
C/o N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு
கோண்டாவில். (1778)

நீக்கார் பட்டயம்

I. S. நாகேசு

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட I. S. நாகேசு (உரிமையாளர், ஜெயஜோதி எலக்ரிக்கல் இஞ்ஜினியரிங் வேக்ஸ், 41, பஜார் லேன், யாழ்ப்பாணம்) காலமானார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், சந்திரசேகரன், ஜெயசேகரன், ஞானசேகரன், குலசேகரன், ஜெகதரன் பிள்ளை, ஜெகதீஸ்வரி, ராஜசேகரம், குணசேகரம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் நவாலி தெற்கு இல்லத்திலிருந்து கொத்தந்தட்டி மயானத்துக்கு இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: மனைவி.